www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

26 DECEMBER 2022 - MONDAY

Pages - 10

E Paper - # 021 / Y 01 / 2022

Web: WWW.NEWSPLUS.LK

E-mail: editor@newsplus.lk

## அரசியலமைப்பு சபை வியாழனன்று கூடும்

அரசியலமைப்புப் பேரவைக்கான மூன்று சிவில் சமூக பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்காக அரசியலமைப்புச் சபை எதிர்வரும் வியாழக்கிழமை கூடவுள்ளது.

இந்த மூன்று 02 »»

## உள்ளூராட்சி தேர்தல்

# ஜனவரி முதல் வாரத்தில் வேட்புமனு கோரல்




நாட்டின் 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிய உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக அடுத்த ஆண்டு ஜனவரி முதல் வாரத்தில் தேர்தல் ஆணைக்குழு நியமனப் பத்திரங்களை கோரவுள்ளது.

உள்ளூராட்சி சட்டத் தேர்தல் படி பதவிக்காலம் முடிவுற்று ஓராண்டுக்குப் பிறகு தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாக உள்ளதனால் ஜனவரி 5 ஆம் திகதி முன் நியமனப் பத்திரங்கள் கோரப்படுமென தேர்தல் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நாட்டின் 341 உள்ளூராட்சி மன்றங்களில் ஒன்று 02 »»

## அக்குறணை வெள்ள அனர்த்தம்: 300 கோடிக்கு மேல் சேதம்?

### சுத்திகரிப்பு பணிகள் தீவிரம்





08 »»



## குடும்ப சகிதம் கோட்டா பறந்தார்

### துபாயில் தங்குவதாக தகவல்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபே ராஜபக்ஷ தனது குடும்பம் சகிதம் நேற்று வெளிநாடு பயணமானார்.

டுபாய் மூலம் அமெரிக்காவுக்கு சென்றதாக சில 02 »»

## அக்குறணைக்கு உதவுங்கள்

### உலமா சபை வேண்டுகோள்

அக்குறணையில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கோரி அக்குறணை ஜம்இய்யதுல் உலமா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. 02 »»

## சீரற்ற காலநிலையால் 4 மாவட்டங்களில் பாதிப்பு

குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நாட்டை கடந்து செல்வதால் நேற்று (25) பகல் முழுவதும் பெய்த கடும் மழை மற்றும் காற்று 02 »»

## வடக்கில் பிரிந்திருந்த கட்சிகள் கூட்டாக போட்டியிட முடிவு

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வடமாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களில் தமிழ் கட்சிகள் கூட்டாக போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளது. சில தினங்களுக்கு முன் நடைபெற்ற 02 »»

## இலங்கையின் நற்பெயரை தூக்கி நிறுத்துங்கள்

### புதிய தூதுவர்களிடம் பிரதமர் கோரிக்கை



பாரம்பரிய இராஜதந்திர முறைக்குப் பதிலாக பொருளாதார இராஜதந்திரத்திற்கு உலகில் முன்னுரிமை கிடைத்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். 02 »»

# போதைப் பொருள்கள் வருவதைத் தடுப்பது நிருவாகத்திற்கு அப்பாற்பட்ட மாபியா வலைப்பின்னலாகவுள்ளது

## மட்டக்களப்பு மாவட்ட மேலதிகச் செயலாளர் சுதர்ஷினி



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மாவட்டத்திற்கு போதைப் பொருள்கள் வருவதைத் தடுப்பது மாவட்ட நிருவாகத்திற்கு அப்பால்பட்ட ஒரு மாபியா வலைப்பின்னலாக உள்ளது என மட்டக்களப்பு மேலதிக மாவட்டச் செயலாளர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

பெண் குடும்பத் தலைவர்களுக்கான மாறிச் செல்லும் வரையறைகளை உருவாக்குதல் எனும் ஆய்வின் கொள்கைச் சுருக்க வெளியீட்டு நிகழ்வில் அவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

விழுது ஆற்றல்மேம்பாட்டு மையத்தின் ஒழுங்கமைப்பில் அந்நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட தலைமை அதிகாரி இந்துமதி ஹரிஹரதாமோதரன் தலைமையில் மட்டக்களப்பு தனியார் விடுதியில் இந்நிகழ்வு வெள்ளிக்கிழமை 23.12.2022 இடம்பெற்றது.

இதில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் பதுளை மாவட்டங்களைச் சேர்ந்த பெண்கள் ஒன்றிய, பெண்கள் சமாச செயற்பாட்டாளர்களின் ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

மாற்றத்தை நோக்கி இளையோர் சமூகத்தால் அடையாளப்படுத்தப்பட்ட சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடியால் இளையோர் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகள், பெருந்தோட்டப் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் மனித உரிமை மீறல்களும் அதன் தாக்கங்களும், மலையகத்தில் மாணவர்களின் இடைவிலகல், முஸ்லிம் மக்கள் மத்தியிலான விவாகரத்தின் போக்குகளும் அதன் தாக்கங்களும்



உள்ளிட்ட பல்வேறு ஆய்வுகளின் கண்டுபிடிப்புகள், பாதிப்பினால் சமூகம் எதிர்கொள்ளும் அபாயங்கள் மற்றும் அனைத்து மட்டங்களுக்குமான பரிந்துரைகள் ஆகியவை நிகழ்வில் பிரகடனங்களாக சமர்ப்பிக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மேலும் உரையாற்றிய மாவட்ட மேலதிகச் செயலாளர் சுதர்ஷினி, அரசின் எந்தவொரு உதவித் திட்டத்திலும் முதலாவதாக உதவிகளைப் அபெறும் தரப்பாக பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் இருக்கிறார்கள். பெண்களுக்கான உரிமைகள் கொள்கைகள், சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் பல்வேறு கொள்கையாக்கங்கள் இங்கே வழங்கப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பில் 35 ஆயிரம் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் இருக்கின்றார்கள். இவர்களில் சுமார் 15 ஆயிரம் குடும்பங்கள் பொருளாதார மேம்பாடு கண்டவர்களாக உள்ளார்கள். கல்வி ரீதியிலான முன்னேற்றங்களைக் கண்டவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள்.

நாம் காலங்காலமாக பெண்களையும் சிறுவர்களையும் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்காளக அடையாளப்படுத்தி வந்திருக்கின்றோம். எந்தவொரு பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களும் பூச்சியத்தில் இல்லை என்று நிச்சயமாக நான் கூறுவேன். அவர்களை பூச்சிய நிலைமையிலிருந்து முன்னேற்றியதன் பங்களிப்பு அரச சார்பற்ற நிறுவனங்களையும் அரசின் சில கொள்கைகளையும் சாரும்.

பெண்களை பொருளாதார ரீதியாக தூக்கி விடுவதுதான் அவர்களை மீண்டெழுந்து சொந்தக் காலில் நிற்க வைப்பதற்கான ஒரே வழியாகும். அடுத்தது அவர்களை அரசில் தீர்மானங்களை எடுக்கின்ற அரசியல் பங்களிகளாக மாற்ற வேண்டும். ஒட்டு மொத்த சமூகத்திற்கே கேடு உண்டாக்கும் போதைப் பொருள் பாவனை, பெண்களை பாலியல் இலஞ்சத்திற்கு ஆளாக்குவது என்பவை வெறுமனே பெண்களுக்கான பிரச்சினைகளாக மட்டும் நோக்கக் கூடாது.இதற்கு அனைவரும் இணைந்து சட்டம் ஒழுங்கின் அடிப்படையில் தீர்வு காண வேண்டும்.

நாங்கள் மாவட்ட நிருவாகம் போதைப் பொருள் ஒழிப்பிற்காக விளம்பரம் இல்லாமல் பல்வேறு செயற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றோம். இதில் ஒட்டு மொத்த சமூகங்களும் இணைந்து கொள்ள வேண்டும். போதைப் பொருள் ஊடுருவும் மார்க்கம், அதனைத் தடுத்து நிறுத்துவது நிருவாகத்திலுள்ள எங்களது கைகளுக்கு எட்டாத ஒரு மாபியாவாகவே கருத வேண்டியுள்ளது" என்றார்.

NEWS PLUS இல்,
சிறு விளம்பரங்களை பிரசுரிக்க நாங்கள் தயாராக உள்ளோம்....
உங்கள் வியாபரத்தினை வியாபிக்க...
உங்களது விற்பனைப் பொருட்களை சந்தைப்படுத்த...
அல்லது
நீங்கள் ஏதாவதொரு பொருளை விற்க வேண்டுமா?
Newsplus மின்னிதழில் உங்கள் தரமான விளம்பரங்களை குறைந்த விலையில் இலகுவாக பிரசுரியுங்கள்.....
ரூபா. 200 முதல் விளம்பரங்களை பிரசுரிக்க முடியும்
Collaborate with Publish Partner... SIYANE NEWS
விற்பனை அடையாளங்களை பிரபல்யப்படுத்துங்கள்
தொடர்புகளுக்கு: பயனை இன்றே அனுபவியுங்கள்...
Rikas - 076 70 23 241
Sanuskanth - 076 260 0343
Rihmy Hakeem - 072 060 3053
Thivagaran - 77 464 6663
Nawfees - 75 510 3901

## குடும்ப..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனை மறுத்துள்ள சில செய்திச் சேவைகள் அவர் டுபாயிலிருந்து ஐரோப்பிய நாடொன்றுக்குச் சென்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளன.

## இலங்கையின்..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையின் புதிய தூ துவர்கள் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் இடையில் இன்று (டிசம்பர் 26) அலரி மாளிகையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த கலந்துரையாடலில் 16 புதிய தூ துவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் கலந்துகொண்டனர்.

முதலீட்டை ஈர்ப்பதற்கும், ஏற்றுமதி மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும், நடுநிலையான, அணிசேரா நாடு என்ற நற்பெயரை மேம்படுத்துவதற்கும், அனைவருக்கும் நட்புறவுடன் செயல்படுவதற்கும் தாம் பாடுபடுவதாக புதிய தூதுவர்களிடம் பிரதமர் தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் மறுசீரமைப்பு குறித்து கருத்து தெரிவித்த பிரதமர், முதலீடுகள், கூட்டு முயற்சிகள் மற்றும் இருதரப்பு கூட்டாண்மைக்காக உழைக்குமாறு இலங்கை தூதுக்குழுக்களிடம் கேட்டுக் கொண்டார்.

அதிக முதலீடுகள், வேலை வாய்ப்புகள் மற்றும் மேம்பாட்டு உதவிகளைப் பெறுவதற்கு புலம்பெயர்ந்த சமூகம் மற்றும் அவர்களது சங்கங்களுடன் நாம் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும். இலங்கையின் விரைவான பொருளாதார மீட்சியை அடைந்து தன்னிறைவு அடைவதற்கும் விவசாயம், கைத்தொழில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கும் இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நட்பு நாடுகள் ஒத்துழைக்க முடியும் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஸ்தாபிக்கப்பட்ட முதலீட்டு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு குழுக்களுக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குமாறும் பிரதமர் குணவர்தன வலியுறுத்தினார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்களான முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் சித்ராங்கனி வகேஸ்வரா (ஆஸ்திரேலியா), முன்னாள் வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே (இந்தோனேசியா), மனிஷா குணசேகர (பிரான்ஸ்), எச்.எம்.ஜி.ஆர். கே. மெண்டிஸ் (பஹ்ரைன்), டாக்டர் ஏ.எஸ்.யு. மெண்டிஸ் (வியட்நாம்), வருணி முத்துக்குமரன (ஜெர்மனி), கபில ஜயவீர (லெபனான்), எம். எச்.எம்.என். பண்டார (இஸ்ரேல்), கே.கே.தெஷாந்த குமாரசிறி (எத்தியோப்பியா), கலாநிதி சானக எச்.தல்பஹேவா (பிலிப்பைன்ஸ்), பிரியங்கா விஜேகுணசேகர (ஜோர்டான்), பி.காண்டீபன் (குவைத்), ஹிமாலி அருணதிலக்க (ஜெனீவா), உதய இந்திரரத்ன (ஐக்கிய அரபு எமிரேட்ஸ்) மற்றும் சண்டி எமிரேட்ஸ் சமரசிங்க (கான்சல் ஜெனரல்-மெல்பேர்ன்) உற்பட மற்றும் பலர் இணைந்தனர்.

## வடக்கில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கூட்டத்தில் சகல தமிழ் கட்சிகளும் கலந்து கொண்டு தாம் ஒருமித்துப் போட்டியிடுவதற்கு இணக்கம் தெரிவித்ததாக தமிழ் கூட்டமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முன்னாள் நீதியசரசர் விக்னேஷ்வரன் தலைமையிலான கட்சியும் கூட்டாக போட்டியிட இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனவரி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தவிர்ந்த சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் நியமனப் பத்திரங்கள் கோரப்படவுள்ளன.தேர்தல் வழக்கொன்றின் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட பெந்தரல்பிடிய பிரதேச சபையின் பதவிக்காலம் இன்னும் ஒரு வருடமும் நாளு மாதத்தில் முடியவுள்ளது. அதனால்

பெந்தரல்பிடிய தவிர்ந்த நாட்டின் ஏனைய சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் நியமனப் பத்திரங்கள் கோரப்படவுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

## அக்குரணைக்கு..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதற்கமைய, கடந்த 2022 டிசம்பர் 24, 25 ஆகிய திகதிகளில் பெய்த அடைமழை காரணமாக அக்குறணை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

உயிர், உடமைகள், வியாபார ஸ்தலங்கள். வீடுகள், வாகனங்கள் பல்வேறுபட்ட சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான அனர்த்த சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எம்மால் முடியுமான ஒத்துழைப்புகளையும் உதவிகளையும் செய்வது எம் மீது கடமையாகும்.

எனவே, உங்களால் முடியுமான நிதி உதவிகளை மனமுவந்து தந்துதவுமாறு அக்குறணை ஜம்இய்யதுல் உலமா, அஸ்னா மத்திய பள்ளிவாசல், அக்குறணை மஸ்ஜிதுகள் சம்மேளனம், அக்குறணை வர்த்தக சங்கம் ஆகிய பொது நிறுவனங்கள் சார்பாக வேண்டிக்கொள்கிறோம்

மேலதிக குறிப்பு : உங்களது நிதி உதவிகளை அஸ்னா மத்திய பள்ளிவாசலில் அல்லது அக்குறணை ஜம்இய்யதுல் உலமா காரியாலயத்தில் அல்லது AKURANA JAMIYYATHUL ULAMA Disaster Relief fund 0100115399001 (Amana Bank – Akurana Branch) என்ற வங்கி இலக்கத்தில் வைப்பிலிடுமாறும் அதற்கான பற்றுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம். (வங்கியில் வைப்பிடுபவர்கள் Bank Slip இனை 0777 46 71 71 என்ற வட்ஸப் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்)

மேலதிகமான விபரங்களுக்கு : 0777467171, 0773841409, 0772492609, 0777807070, 0767444327 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அன்பாக கேட்டுக்கொள்கிறோம்.

## சீரற்ற...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

காரணமாக 4 மாவட்டங்களில் 110 வீடுகள் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. .

இதில் ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 109 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இந்த அனர்த்தத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாகவும் ஏழு பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி, மாத்தளை, அம்பாறை, பதுளை ஆகிய மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த மாவட்டங்களில் 387 குடும்பங்களைச் சேர்ந்த 1,675 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கண்டி மாவட்டம் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அந்த மாவட்டத்தில் 322 குடும்பங்களைச் சேர்ந்த 1,367 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## அரசியலமைப்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பிரதிநிதித்துவத்தை பெறுவதற்காக 112 பேர்கள் விண்ணப்பித்துள்ளதாக பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.21ஆவது அரசியல் யாப்பின் படி 10 பேர் கொண்ட அரசியலமைப்புச் பேரவையில் சிவில் சமூகத்தின் சார்பில் மூன்று பிரதிநிதிகள் தெரிவுசெய்வதற்காக எதிர்வரும் 28 ஆம் திகதி அரசியலமைப்புச் சபை கூடவுள்ளது.

# மட்டக்களப்பில் மின்னல் தாக்கம்: ஏறாவூரில் 27 உயிர்கள் பலி!



(எச்.எம்.எம்.பர்ஸான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று (25) அதிகாலை பாரிய இடி மின்னல் தாக்கம் ஏற்பட்டது.

இதில், ஏராளமான வீட்டு மின்சாரப் பொருட்கள் சேதமடைந்ததாக பாதிக்கப்பட்டோர் கவலை தெரிவித்தனர்.

அத்துடன், பாரிய இடி மின்னல் தாக்கத்தினால் ஏறாவூர் றஹ்மானியா பாடசாலை வீதி எட்டாம் ஒழுங்கையிலுள்ள இஸ்மாயில் அன்வர் என்பரின் ஆட்டுக்காளை கருகி சாம்பலாகியுள்ளது.

இதில், அங்கிருந்த 9 ஆடுகள், 11 முட்டைக் கோழிகள், 4 சேவல்கள், 3 வாத்துக்கள் போன்றவை கருகி சாம்பலாகியுள்ளன.

# பெண்களின் உரிமையை மதியுங்கள்: ஆப்கனுக்கு கட்டார் அறிவுரை



ஆப்கானிஸ்தானில் பெண்கள் வேலைக்குச் செய்வதற்கான உரிமையை மதியுங்கள் என்று தலிபான்கள் அரசிடம் கட்டார் அரசு கேட்டுக் கொண்டுள்ளது. ஆப்கனில் பல்கலைகழகங்களில் பயில பெண்களுக்கு தலிபான்கள் அரசு தடை விதித்ததைத் தொடர்ந்து, நாடு முழுவதிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், மீண்டும் சர்ச்சையான உத்தரவை தலிபான்கள் அறிவித்தனர். ஆப்கனில் உள்ள உள்ளூர் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களில் பெண்கள் ஊழியர்களாக இருப்பதற்கு தலிபான்களால் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை ஆப்கனின் பொருளாதார அமைச்சகம் வெளியிட்டிருக்கிறது.

இந்த நிலையில், தலிபான்களின் இந்த உத்தரவை கட்டார் விமர்சித்துள்ளது. இதுகுறித்து கத்தார் வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பில், “பெண்கள் வேலை செய்வதற்கான உரிமையை மதியுங்கள். தாங்கள் செய்யும் வேலையை சுதந்திரமாக தேர்ந்தெடுப்பது என்பது மனிதர்களுக்கான உரிமை. ஆப்கனில் பெண்கள் ஆடை கட்டுபாட்டை சரியாக கடைப்பிடிக்கவில்லை என்று கூறி தொண்டு நிறுவனங்களில் பணிபுரிய பெண்களுக்கு தலிபான்கள் அரசு தடை விதித்துள்ளதை அறிந்து கவலை கொள்கிறோம். தலிபான்கள் தங்கள் முடிவை மறுபரிசீலனைக்கு உட்படுத்தி, பெண்கள் வேலைக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும்” என்று கேட்டுக் கொண்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் கடந்த 2021-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியேறின. அதன் பின்னர் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். இஸ்லாமியர்களின் ஷரியத் சட்டத்தின்படியே ஆட்சி என்று அறிவித்தனர். அதேவேளையில், கடந்த முறையைப் போல் ஆட்சி இருக்காது. பெண் கல்வி, பெண் சுதந்திரம் பேணப்படும், உலக நாடுகளுடன் நட்புறவு ஏற்படுத்தப்படும் என்று உறுதியளித்தனர். ஆனால், தொடர்ந்து பெண்களின் உரிமையைப் பறிக்கும் செயல்களிலே தலிபான்கள் ஈடுபட்டு வருவது கவனிக்கத்தக்கது.




# கத்தார் தமிழ் கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

இந்திய தூதரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கத்தர் தமிழர் சங்கம் ஏற்பாடு செய்த, வெகு விமரிசையாக நடந்து முடிந்த உலகக்கிண்ணத்தை ஆதரிக்கும் கலாசார விழாவை பாராட்டும் வகையில் அதில் கலந்துகொண்ட அனைத்து கலைஞர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (25) கத்தார் றோயல் பிளாசாவில் நடைபெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (18.12.2022) உலகக்கிண்ணத்தை ஆதரிக்கும் கலாசார நிகழ்வு லூசைலில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் பறையிசை, சிலம்பாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், கரகாட்டம் தெருக்கூத்து, பொய்க்கால் குதிரை ஆகிய கத்தர் வாழ் தமிழ் கலைஞர்களால் வெளிநாட்டு கால்பந்து ரசிகர்கள் மத்தியில் மாபெரும் நிகழ்ச்சியாக கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் தனது திறமைகளை வெளிகாட்டிய அனைத்து கலைஞர்களையும் அவர்களை பயிற்றுவித்த ஆசான்களையும் ஊக்குவிக்கும் முகமாக விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் கத்தர் தமிழர் சங்கத்தினால் வழங்கப்பட்டது.






## அரங்கம்

# ஸங்கரில்லா திருமண மண்டபத்தில் இரகசிய அரசியல் மந்திராலோசனை

### அலரிமாளிகையை அளர வைத்த முஹிதீன் பேக்கின் பாடல் வரிகள்

பிரதமர் தினேஷ் குணவர்தன பிரபல பாடகர் முஹிதீன் பேக்கின் குடும்பத்தவர்களை அலரிமாளிகைக்கு அழைத்திருந்தார். மர்ஹூம் முஹைதீனின் மகள் முஹைனா பேக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களும் அலரி மாளிகைக்கு வருகை தந்திருந்தனர்.

முஹிதீன் பேக் நாட்டுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை கௌரவிக்கும் முகமாக அவரது மகள் முஹைனா பேக்குக்கு அகில இலங்கை சமாதான நீதவான் பதவியை வழங்குவதற்காகவே பிரதமர் இந்த அழைப்பை விடுத்திருந்தார்.

முஹிதீன் பேக்கின் குடும்பத்தோடு ஏற்கனவே நெருங்கிய தொடர்பு வைத்திருந்த பிரதமர் வருகை தந்த குடும்பத்தவர்களுடன் மற்றும் பிரமுகர்களுடன் முஹிதீன் பேக்குடைய பங்களிப்பு மற்றும் வரலாறு பற்றி நினைவு படுத்தினார். அவரது பாடல்களது பெருமதியைப் பற்றி குறிப்பிடும் போது முஹினா பேக், தனது தந்தை பாடிய பிரபலமான பாடல்களின் ஒரு சில வரிகளை பாடியபோது அந்த அறையே அதிர்ந்து போனது போல் இருந்தது.

முஹிதீன் பேக் இலங்கைக்கு வருகை தந்த நூறு வருடங்களை நிறைவையொட்டி ஒரு பிரமாண்டமான நிகழ்வை ஏற்பாடு செய்ய தான் விரும்புவதாக பிரதமர் தெரிவித்தார். இது தொடர்பாக இதற்கு முன் கலந்துரையாடலை நினைவுபடுத்தி பேசிய பிரதமர் அலுவலக அதிகாரிகள் அந்த நிகழ்வை எவ்வாறு நடத்துவது பற்றி ஆலோசனை தெரிவித்தனர்.

முஹிதீன் பேக் இந்த நாட்டுக்கும் குறிப்பாக பௌத மதத்துக்கும் ஆற்றிய அளப்பறிய சேவைகளை நன்றியுடன் நினைவுகூறிய பிரதமர் ஜனவரி மாத நடுப்பகுதியில் இந்த விழாவை பிரமாண்டமான முறையில் நடாத்துவதற்கு உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

சுமார் 45 நிமிடங்களுக்கும் மேலாக இடம்பெற்ற இச்சந்திப்பில் முஸ்லிம் கவுன்சில் ஸ்ரீலங்காவின் தலைவர் அல்ஹாஜ் என்.எம்.அமீன், தொழிலதிபர் எம்.எல்.எம்.மஹ்சூம் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தொழிலதிபர் எம்.சி.ஏ.மஹ்சூம் பிரதமருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

ஜனசக்தி கூட்டு முயற்சி பணிப்பாளர் தினேஷ் பாஸ்டர் கொலை செய்யப்பட்ட விவகாரம் கடந்த சில தினங்களாக பரவலாக பேசப்படும் விடயமாக மாறியுள்ளது. பொரளை கணத்தைக்குள் இடம்பெற்றதாகக் கூறும் இக்கொலை சம்பந்தமாக விசாரணை நடத்தி வந்த பொலிஸார் புதிய திருப்பபொன்றை கண்டுபிடித்து அதனூடாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த கொலைக்கான சூத்தாரி யாரென இதுவரை சந்தேகப்பட்டார்களோ, அதனை தவிர்த்து வேறொருவரே இதனை செய்திருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்வதற்கு இரகசிய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இரகசிய பொலிஸாரின் வேண்டுகோளுக்கிணங்க அரசாங்க இரசாயண பகுப்பாய்வுப் பிரிவினர் கடந்த 24ம் திகதி கொழும்பு-7 ப்ளவர் வீதியிலுள்ள தினேஷின் வீட்டுக்குச் சென்று பரிசோதனை நடாத்தியுள்ளனர். அப்போது அந்த வீட்டிலிருந்த தினேஷ்ஷின் கழுத்தை இறுக்குவதற்கு பயன்படுத்திய எண்டனா வயரின் எஞ்சிய பகுதியையும் தினேஷ்ஷின் கைகளை கட்டுவதற்கு பயன்படுத்திய கெபில்கள் சிலவற்றையும் கைப்பற்றியுள்ளனர். எண்டனா வயர் தினேஷின் தாயாரின் வீட்டில் தொலைக்காட்சிக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

கேபில் டைப் எட்டு என்ற வயரும் தினேஸுடைய அறையின் மேசை லாச்சிக்குள் இருந்திருக்கிறது. இந்த இரண்டும் அதிகாரிகளுக்கு இக்கொலைக்கு வேறு காரணிகள் இருக்குமென்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. குற்றத் தடுப்புப் பிரிவினர் இக்கொலை எப்படி நடத்திருக்கும் என்பதற்கான பல சாட்சிகளை அடையாளங்கண்டு வருகின்றனர்.

இந்தக் கொலை தொடர்பாக தினேஷுடைய குடும்பத்தினரின் வங்கிக் கணக்குகளும் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது. தினேஷுக்கு பொறளை கணத்தை ஒரு புதிய இடமல்ல என்பதும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. பொரளை கணத்தை புதிய இடமாக இருந்திருந்தால் அவர் அங்கு தனது வாகனத்தை நிறுத்தியிருக்கமாட்டார்.

தினேஷ் தனது வீட்டிலிருந்து 2 மணி 06 நிமிடம் அளவில் வெளியேறியுள்ளார். போகும் வழியில் கொழும்பு மலலசேகர மாவத்தையிலுள்ள சிறுண்டிச்சாலை ஒன்றில் இருவருக்கு தேவையான சிற்றுண்டிகளை எடுத்துச் சென்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த உணவுகளை அவர் உண்டதாக மரண பரிசோதனையின் போதும் தெரியவந்துள்ளது. தினேஷ்சுடைய கைகளில் கட்டப்பட்டிருந்த கேபில் டை இலஙகையில் அதிகம் பயன்படுத்துவதில்லை என தெரியவந்துள்ளது. அதேநேரம் தினேஷுடைய காருக்கு அருகில் ஆளொருவர் போவதை கணத்தையில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் கண்டுள்ளார். அந்த நபர் யாரென்று இதுவரை தெரியவில்லை. அந்த நபர் யாரென்று இதுவரை தெரியவில்லை. இதேநேரம் தினேஷ் தனது மாமியாருக்கு அனுப்பிய குறுஞ் செய்தி குறித்தும் அதிகாரிகளின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நல்ல மகளை எனக்கு வளர்த்து தந்த அம்மாவுக்கு நன்றிகள் என அந்த குறுஞ் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல கம்பனிகளின் உரிமையாளரான தினேஷ் வியாபார நடவடிக்கைகளுக்காக பெருந்தொகையான பணத்தை முதலீடு செய்திருந்த போதும் உரிய இலாபம் கிடைக்காததனால் அவருடைய கம்பனிகள் நஷ்டமடைந்திருப்பதும், நுவரெலிய பிரதேசத்தில் விலைகொடுத்து வாங்கிய 300 கோடி ரூபா பெறுமதியான காணி மாகாண நெடுஞ்சாலை அதிகார சபை பொறுப்பேற்றிருப்பதும், யாழ். பிரதேச மந்திரி ஒருவர் அங்கு செய்த முதலீட்டுக்கான 85 கோடி ரூபாவை அவரிடமிருந்து கிடைக்காமை, கிரிக்கெட் விமர்சனர் க்ரேன் தோமஸ்ஸுக்கு வழங்கிய 160 கோடி ரூபாவை பெற முடியாமமை போன்றவை காரணமாக சுமார் 2000 கோடி ரூபா வரை நஷ்டமேற்பட்டிருப்பதாக குடும்பத்தின் நெருங்கியவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் தல்துவ தெரிவிக்கும் போது, இந்தக் கொலை எதற்கு செய்யப்பட்டது, எப்படி செய்யப்பட்டது, யாரால் செய்யப்பட்டது, இதன் திட்டம் என்ன போன்ற தகவல்களை அறிந்து கொள்வதற்காக விரிவான விசாரணைகள் நடத்தப்படுவதாக தெரிவித்தார்.

இந்த விசாரணைகள் தொடர்பாக இதுவரை சுமார் 75 பேருக்கும் மேற்பட்டோர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இவ்வாறு சாட்சி வழங்கியவர்களில் குடும்ப அங்கத்தவர்களும் இருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தல்துவ தெரிவித்தார். அவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் தினேஷ ின் இரு சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரியும் அடங்குகின்றனர். அவர்களுடன் தினேஷுடைய சொத்துக்கள் தொடர்பாக விபரங்கள் பெறப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். தினேஷின் மனைவியும் பலமுறை வாக்குமூலங்களை அளித்துள்ளார்.

இந்தக் குற்றம் தொடர்பாக தினேஷுக்கு மேலதிகமாக அவருடைய மனைவி தாணி சாமி, தினேஷின் நண்பரும் ஊழியருமான க்ரிஸ் பெரேரா உட்பட பலரிடம் வாக்குமூலங்களைப் பெறப்பட்டிருக்கின்றன.

### ஸங்கரில்லா திருமண மண்டபத்தில் இரகசிய அரசியல் கலந்துரையாடல்

கடந்த 19ஆம் திகதி மாலை முன்னாள் ஜனாதிபதி கோத்தாபே ராஜபக்ஷவின் செயலாளர் காமினி செனரத்னவின் மகனின் திருமண நிகழ்வு கொழும்பு ஸங்கிரில்லா ஹோட்டலில் இடம்பெற்றது.

ஸங்கிரில்லா ஹோட்டல் வரலாற்றில் இப்படி ஒரு திருமணம் இதற்கு முன்னர் இடம்பெறவில்லை என அவதானிகள் தெரிவித்தனர். நெதர்லாந்திருந்து பூக்கள் கூட கொண்டுவரப்பட்டிருந்தன. இந்த திருமண வைபவத்திற்கு பெருந்தொகையானோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபே ராஜபக்ஷ, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட பெருந்திரளான அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்தனர். மண்டபத்தில் முன்புறமாக ஜனாதிபதிகளுக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான தலதா அதுகோரல, ஜே.சி.அலவதுவல, ஹேஷா விதானகே உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

திருமண வைபவம் ஆரம்பிப்பதற்கு முன் ஹோட்டலில் புறம்பாக ஒதுக்கப்பட்டிருந்த அறையில் அரசியல் பிரமுகர்கள் பலரும் ஒன்றுகூடி பல விடயங்கள் பற்றிப் பேசினர். எதிர்கால அரசியல் தொடர்பாக இங்கு பேசப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க, பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் சாகல காரியவசம், முன்னாள் அமைச்சர் ஜொன்சன் பெர்னாண்டோ இந்த இரகசிய கலந்துரையாடலில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

### நவின் திசாநாயக்காவுக்கு எதிர்ப்பு கிளம்புகிறது

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் நவின் திசாநாயக்க கடந்த செவ்வாயன்று சிறிகொத்தவில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார்.

அடுத்த தேர்தல்களில் ஐ.தே.க.வும், மொட்டுக் கட்சியும் கூட்டாக சேர்ந்து போட்டியிடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நவினின் இந்த கூட்டுக்கு ஐ.தே.கக்குள் சாதகமாக கருத்துத் தெரிவிப்பவர்களை காணமுடியவில்லை. ஐ.தே.க. ஆதரவாளர்கள் நவினின் இந்த கூற்றை அடுத்து விரக்தியடைந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒன்றாக சேர்ந்து வாக்குக் கேட்பதற்கு நாங்கள் எப்படி ஊருக்குச் செல்வதென்று ஒருவர் கேள்வி எழுப்பியிருக்கிறார். இவர்கள் நாட்டுக்கு செய்திருக்கும் துரோகத்தை பார்க்கும் போது யார் இவர்களுக்கு வாக்களிப்பார்கள் என்று கொழும்பு உள்ளூராட்சி மன்ற முக்கியஸ்தர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

நவினின் இந்த கூற்றுக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ள மொட்டுக் கட்சி ஆதரவாளர்கள் பலரும், நாங்கள் இனி ஒருபோதும் வாக்களிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

### ரம்புக்வெல்லவின் இந்திய விஜயத்துக்கு ஆட்சேபனை

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல 21ஆம் திகதி இந்தியாவுக்கு பயணமானார்.

நாட்டில் நிலவும் தீவிர மருந்துப் பற்றாக்குறையில் தேவைப்படும் 28 மருந்து வகைகளை இந்தியாவிலிருந்து பெற்றுக் கொள்வதற்காகவே அவர் இந்தியாவுக்கு சென்றுள்ளார்.

அமைச்சருடைய இந்திய விஜயம் நாட்டுக்குள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமைச்சர் இந்தியா சென்றிருப்பது தேசிய மருந்து ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படாத குஷி பாமாடிகல் என்ற கம்பனியில் டென்டர் இல்லாமல் 28 மருந்து வகைகளை தருவிப்பதற்கே என எதிர்க்கட்சிகள் பிரச்சாரம் செய்கின்றன.

இங்கிருந்து பெறப்படவுள்ள 28 மருந்து வகைகளும் பதிவு செய்யப்படவில்லை. இவற்றை கொண்டுவரவேண்டுமானால் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் எவ்வளவோ இருக்கிறார்கள். எங்களுக்குத் தெரியும் இந்தியாவில் சில வழங்குனர்கள் இருக்கிறார்கள். கோதுமை மாவை கூட விற்றமின்களாகப் போட்டு அனுப்புவார்கள் என்றும் சுகாதாரத் துறை முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசு இவை யாவற்றிலும் மிகக் கவனமாக இருக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

### அசூ மாரசிங்க தொடர்பான சர்ச்சை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற விவகார அலோசகர் அசூ மாரசிங்க தொடர்பாக வெளிவந்துள்ள சர்ச்சையான செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாயொன்றை தொடர்புபடுத்தி அவரது மனைவி எனக் கூறப்படும் ஒருவர் வெளியிட்டுள்ள செய்தியே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பான புகைப்படங்கள், வீடியோ காட்சிகள் வெளிவந்ததையடுத்து ஜனாதிபதியின் ஆலோசகர் பதிவியிலிருந்து மாரசிங்க இராஜினாமாச் செய்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் எம்.பி. ஹிருணிகா பிரேமசந்திர மாரசிங்கவின் மனைவி என்று கூறப்படும் ஒருவருடன் இணைந்து செய்தியாளர் மாநாடொன்றை நடாத்தியிருந்தார். முன்னாள் எம்.பி. பேராசிரியர் மாரசிங்க இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

### எல்லைப் பிரதேசத்தின் புனித்தை பாழாக்காதீர்கள்

பதுளை மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை முடித்துக் கொண்டு தியத்தலாவையில் நடைபெற்ற பெண் கடற்படை உத்தியோகத்தர்களின் பயிற்சியை முடித்து வெளியேறும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றார்.

அல்ல பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை பார்வையிட்ட ஜனாதிபதி, அதன் அழகுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அலோசனை வழங்கினார். தான் கைப்பிள்ளையாக இருக்கும் போது தன்னுடைய பெற்றோர் இந்த இடத்துக்கு அழைத்து வந்ததை ஜனாதிபதி நினைவு படுத்தினார். தியத்தலாவையிலுள்ள ஆர்கேடியா பங்களாவில் தான் சிறு வயதிலிருந்து வருவதை ஜனாதிபதி நினைவுபடுத்தினார்.

ஜனாதிபதியுடன் இந்த நிகழ்வில் ஐ.தே. பொதுச் செயலாளர் ரங்கே பண்டாரவும் வருகை தந்திருந்தார். அப்போது குறுக்கிட்ட ரங்கே பண்டார, சேர் எல்ல தேநீர் கோப்பை கதையென்ன என்று கேட்டார். இந்த இடத்துக்கு உல்லாசப் பயணிகள் வருவது இதன் இயற்கையை அனுபவிப்பதற்காகும். இங்கிருக்கும் அநேகருக்கு அது விளங்குவதில்லை என்றும் ஜனாதிபதி பதிலளித்தார். ஜனாதிபதி ரணில் தியத்தலாவ விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்புக்கு சனியன்று வர தயாரானார்.

எனினும் அங்கு நிலவிய காலநிலை காரணமாக அவர்களை அழைத்து வந்த விமானத்தில் செல்ல முடியவில்லை. அதனால் அவர்கள் அங்கே ஆகேடியா தனியார் இல்லத்தில் தங்கி அடுத்த நாள் காலை வாகனம் மூலம் கொழும்பு பயணமாகினர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காலநிலை மாற்றம் தொடர்பாக சட்டமூலத்தை உடனடியாக திருத்த நடவடிக்கை எடுக்குமாறு காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம்முடன் நடந்த கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சுற்றாடல் ஆலோசகர் ருவன் விஜேவர்தனவும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 DECEMBER 26 - MONDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

# கால்பந்தாட்டம் மூலம் உலகை வென்ற கட்டார்

உலக கால்பந்தாட்டப் போட்டி கடந்த ஞாயிறன்று நிறைவு பெற்றது. இறுதிப் போட்டிக்குத் தெரிவான பிரான்ஸை தோற்கடித்து ஆர்ஜன்டீனா வெற்றியை சுவீகரித்துக் கொண்டது.

கடந்த ஒரு மாத காலத்துக்கும் மேலதிகமாக முழு உலகின் அவதானமும் கட்டார் பக்கமே இருந்தது. அரபு நாடொன்றில் முதன்முறையாக இடம்பெற்ற இந்த சர்வதேச போட்டியை மிகச் சிறப்பாக நடத்தி முடித்தமைக்கு கட்டாருக்கு அனைவரும் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். கட்டார் மன்னரின் நேரடியான கண்காணிப்பின் கீழே இந்தப் போட்டிகள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

போட்டிகளில் அர்ஜன்டீனா வெற்றி பெற்றதோடு, கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டது. அதேபோன்று போட்டியை நடத்திய கட்டார் உலகை வென்றது. ஒரு காலப் பகுதியில் அரபு மற்றும் முஸ்லிம் நாடுகள் பற்றி மாற்றமான கருத்துக்களை தெரிவித்து வந்தவர்களது வாயினை மூடும் வகையில் கட்டார் இப்போட்டித் தொடரை சிறப்பாக நடத்தி முழு உலகுக்கும் முன்மாதிரி காட்டியுள்ளது. இந்தப் போட்டியை கட்டாருக்கு வழங்குவதற்கு சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தீர்மானத்தை விமர்சித்தவர்கள் கூட போட்டிகள் நடத்தியமை குறித்து வியப்புடன் நோக்குகின்றனர்.

கட்டார் மன்னர் தமீம் பின் ஹமாத் அத்தாரி அவர்களும், அவர்களது அரசாங்கமும் உலக உதைப்பந்தாட்ட சங்கமும் வழங்கிய தலைமைத்துவம் இந்தப் போட்டித் தொடரை வெற்றிகரமாக நடத்துவதற்கு முக்கிய பங்கக அமைந்திருந்தது.

உலகில் எந்த இடத்தில் இது போன்ற விளையாட்டு போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றால் போதைப் பானங்கள் பகிரப்படுவது சர்வ சாதாரணமாக இருந்து வருகின்றது. இந்தப் போட்டித் தொடர் ஆரம்பமாவதற்கு முன் கட்டாரில் மதுபான விற்பனை நிலையங்களை திறப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் அரசு அத்தீர்மானத்தை ரத்து செய்தது. கட்டார் அரசு எடுத்த இந்த துணிச்சலான முடிவை முஸ்லிம் நாடுகள் மட்டுமன்றி முஸ்லிம் அல்லாத நாடுகளும் பாராட்டியுள்ளன. கட்டார் இது தொடர்பாக முதலில் எடுத்திருந்த முடிவு குறித்து பல்வேறு தரப்பினரும் கவலை தெரிவித்திருந்தனர். இந்த விடயத்தில் கட்டார் எடுத்த துணிச்சலான தீர்மானம் ஏனைய நாடுகளுக்கும், குறிப்பாக முஸ்லிம் நாடுகளுக்கும் முன்மாதிரியாக அமைந்திருந்தது.

30 இலட்சம் மக்களை கொண்ட சிறிய நாடான கட்டார் 2012 ஆம் ஆண்டு முதல் உலகின் ஆகக் கூடிய தனி நபர் உள்ள ஒரு நாடாக முன்னேறியுள்ளது. மிகச் சிறந்த தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி கட்டார் முன்னேற்றம் கண்டு வருகிறது. இந்தப் பின்னணியில் உலக உதைப்பந்தாட்டப் போட்டியை பொறுப்பெடுத்து சிறப்பாக செய்து காட்டியுள்ளது.

கட்டார் இப்போட்டியை நடத்தும்போது அதன் கலாச்சாரம், பாரம்பரியம், மதம் மற்றும் வாழ்க்கை போக்கு என்பவற்றுக்கு மதிப்பளித்தே செயற்பட்டது. கட்டாரில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் குறிப்பிடக்கூடிய மற்றொரு முக்கிய விடயம் ஐந்தரை தசாப்தங்களுக்கும் மேலாக தனது பிறந்த மண்ணை விடுவிக்கக்கோரி பலஸ்தீன மக்கள் நடத்தும் சுதந்திர போராட்டத்துக்கு ஆதரவை திரட்டுவதற்கான ஒரு களமாக இந்த போட்டி மைதானங்களை பயன்படுத்தியது.

சர்வதேச உதைப்பந்தாட்டப் போட்டியை நடாத்தி உலகை வென்றெடுத்துள்ள கட்டாரின் இந்த முயற்சிகள் ஏனைய நாடுகளுக்கு படிப்பினை மிக்கதாக அமைந்திருக்கின்றன.

உள்ளூராட்சி எல்லைகள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது?

# அரசாங்க அதிபர் தலைமையிலான எல்லை நிர்ணய குழுவிடம் கேட்டறியுங்கள்

### ஆணைக்குழு தலைவர் மஹிந்த ஆலோசனை





தற்போது நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை அரைவாசியாக குறைக்கப்பட்டுள்ளது. அதன் எல்லைகள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழுவிடம் கேட்டு அறிந்து கொள்ளுமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தேசிய அமைப்பாளர் பி.எம். முஜீபுர் றஹ்மான் தெரிவித்தார்.

அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்குமிடையிலான சந்திப்பு கடந்த (20) செவ்வாயன்று எல்லை நிர்ணய ஆணைக்குழு அமைந்துள்ள கட்டிட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தேசிய அமைப்பாளர் தெரிவித்தார். இச்சந்திப்பின்போது நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பொருளாளர் எம்.எச்.எம். ஹனானும் கலந்து கொண்டுள்ளார்.

இந்த எல்லை நிர்ணய செயற்பாடு என்பது தேர்தலை பிற்போடுவதற்கான ஒரு போலி செயற்பாடு எனவும், எல்லை நிர்ணய ஆணைக்குழவுக்கு எவ்வித சட்ட அங்கீகாரமும் கிடையாது என அங்கு சமூகமளித்திருந்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

எல்லை நிர்ணய பிரிப்பு செயற்பாட்டுக்கும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போடுவதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. தேர்தலை நடத்துவதற்கும் பிற்போடுவதற்கும் தேர்தல் ஆணையாளருக்கே அதிகாரம் உண்டு என அவர் தெரிவித்தார்.

# "மலையகம் - 200" தலைப்பில் இலங்கைக்கு இந்திய தமிழர் வருகையை நினைவுறுத்தும் நிகழ்வு

### – த.மு.கூ. தலைவர் மனோ கணேசன்



"மலையகம் - 200" என்ற தலைப்பில், இலங்கைக்கு வந்த முதலாம் தலைமுறை இந்திய வம்சாவளி தமிழர்களின் வருகையை நினைவுறுத்தும் நிகழ்வை பெப் 26ம் நாள் ஞாயிறன்று தமிழ் முற்போக்கு கூட்டணி நடத்தும். இதில் கலந்துக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பல்வேறு கட்சி தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது, என தமிழ் முற்போக்கு கூட்டணி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மனோ எம்.பி இதுபற்றி மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கை இந்திய மலையக தமிழர், இலங்கைக்கு வந்த 1823ம் ஆண்டிலிருந்து கடந்த 200 வருடங்களாக இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு வழங்கி வரும் பங்களிப்பை ஆராய்வு செய்து அங்கீகரிக்க, அமைச்சரவை பத்திரம் மூலம் இலங்கை அரசு அதிகாரபூர்வமாக தீர்மானித்துள்ளமையை நாம் வரவேற்கின்றோம்.

அதேவேளை இந்திய வம்சாவளி மலையக தமிழர் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் இந்நாட்டில் மிகவும் பின்தங்கிய பிரிவினராக, வறுமை, உணவின்மை, காணியுரிமை இன்மை, வீட்டுரிமை இன்மை, கல்வியுரிமை இன்மைஆகிய கொடுமைகளை எதிர்கொண்டு, இலங்கை தேசிய தளத்தில் முழுமையான பிரஜைகளாக இல்லாமல், பெருந்தோட்டங்களிலும், தொழில் தேடி மாநகரங்களிலும், வாழ்கிறார்கள்.

இந்த மக்களின் பின்தங்கிய குறைவளர்ச்சியை ஆய்வு செய்து அவர்கள் இதுவரை காலமும் இழந்த வளர்ச்சிகளை எட்டிபிடிக்கும் நோக்கில், அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள, மீளுறுதி (affirmative action) நடவடிக்கைகளை அரசாங்கம் எதிர்வரும் 200வது ஆண்டு முதல் முன்னெடுக்க ஆரம்பிக்க வேண்டும் என நாம் அரசாங்கத்தை கோருகிறோம்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் வெளியிட்ட தமிழ் நாடு சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர் எம்.எம் ஜவாஹிருல்லா எழுதிய நபிகளாரின் சமூக உறவு என்ற நூலின் பிரதியும்.ஸிரிலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வெளியீடான மீடியா டிரக்டரியின் பிரதியும் அலறி மாளிகையில் வைத்து பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கையளித்த போது எடுக்கப்பட்ட படம். (ஏ எம் நவாஸ் )

## ஏலக்காய் ஒரு கிலோ 14 ஆயிரம் வரை அதிகரிப்பு

தற்போது சந்தையில் ஒரு கிலோ ஏலக்காய் விலை 12000 ரூபா முதல் 14000 ரூபா வரை அதிகரித்துள்ளது. நாட்டில் பயிரிடப்படும் ஏலக்காயின் அளவு குறைந்துள்ளதே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. ஒரு கிலோ உலர் ஏலக்காயை பதப்படுத்த சுமார் ஆறு கிலோ பச்சை ஏலக்காய் தேவைப்படுவதுடன், சந்தையில் ஒரு கிலோ பச்சை ஏலக்காயின் விலை தற்போது 7000 ரூபா முதல் 8000 ரூபா வரை அதிகரித்துள்ளது. மேலும், இந்நாட்டில் வருடாந்தம் சுமார் 30 மெட்ரிக் தொன் ஏலக்காய் நுகரப்படுகிறது. அதனால், உற்பத்தி குறைந்துள்ளதால், ஏலக்காய் உற்பத்திக்கு அதிக கேள்வியும் தேவையும் ஏற்பட்டுள்ளதாக, ஏலக்காய் விவசாயிகள் கூறுகின்றனர்.



பிரபல பாடகர் மூயினா பேக் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.அலறி மாளிகையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம மந்திரி தினேஷ் குணவர்தனவிடம் இருந்து நியமனம் கடிதத்தைப் பெறுவதை படத்தில் காணலாம்.

# வாகன சாரதிகளுக்கு நுவரெலியாவில் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை!



(செ. திவாகரன் – நானுஓயா)

நுவரெலியா மாவட்டத்தில் நிலவுகின்ற மழையுடனான காலநிலையினைத் தொடர்ந்து கடும் பனிமூட்டம் நிலவி வருகிறது. அத்துடன்

மத்திய மலை நாட்டில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் சீரற்ற வானிலையால் நுவரெலியா மாவட்டத்தின் பல பகுதிகளில் தொடர்ந்து கடும் மழை பெய்து வருகிறது.

நுவரெலியா - ஹற்றன் ,நுவரெலியா - கண்டி , நுவரெலியா -வெளிமடை போன்ற பிரதான வீதிகளிலும் ரதல்ல, நானுஓயா , டெஸ்போட் ,கந்தபளை உள்ளிட்ட பிரதேசங்களிலும் அதிக பனிமூட்டம் நிலவி வருகின்றது.

அதிகளவான பனிமூட்டம் காணப்பட்ட நிலையில் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் இடையூறுகளை சந்திக்கின்றனர்.

எனவே பிரதான வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் எச்சரிக்கையாகவும் அவதானத்துடனும் தங்களுடைய வாகனங்களை செலுத்துமாறும் , பனிமூட்டம் நிலவும் வேளையில் தங்களுடைய வாகனத்தின் முகப்பு விளக்குகளை ஒளிரச்செய்து தமக்குரிய பக்கத்தில் வாகனங்களை செலுத்த வேண்டும் என போக்குவரத்து பொலிஸார் சாரதிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்நிலையிலேயே நுவரெலியாவிலிருந்து தலவாக்கலை செல்லும் பிரதான வீதி நானுஓயா சந்திக்கு அருகில் வீதி தாழிறங்கியுள்ளது தொடர் மழைக்காரணாமாக இந்த வீதியில் மேலும் பல இடங்களிலும் சிறிய மண்சரிவுகள் , பிரதான வீதியில் வெடிப்புக்கள் உள்ளதால் வீதியினை சீரமைக்கும் வரை அவ்வீதியினூடாக பயணங்களை மேற்கொள்ளும் வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் செல்லுமாறும், கனரக வாகனங்களை அவ்வீதியினூடாக செலுத்த வேண்டாம் எனவும் நானுஓயா பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# காப்போம் நிறுவனத்தினால் ஊடகவிலயாளர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு!








(அபு அலா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஊடகவிலயாளர்களின் பிள்ளைகளுக்கு இலங்கை காப்போம் நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை மற்றும் பாதணிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு (23) மட்டு. ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

மட்டு. ஊடக அமையத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் வா.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை காப்போம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதிப்கரன் (திலிப்) கலந்துகொண்டு கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை மற்றும் பாதணிகளை வழங்கி வைத்தார்.

இலங்கை பத்திரிகை பேரவையின் 22வது ஆண்டின் மருத்துவக் கட்டுரைக்கான உயர் ஊடகவியல் தேசிய விருதைப்பெற்ற ஊடகவியலாளர் மட்டு.துஷாரா மற்றும் சமூக விழிப்புணர்வு, கலை கலாசார மருத்துவ ஆக்கங்களை பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தி வருகின்ற சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் ஆகியோர்களை இந்நிகழ்வின்போது காப்போம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதிப்கரனால் பாராட்டி ஞாபகச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், காப்போம் நிறுவனத்தின் செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





சுஜப் எம்.காசிம்

# காலம் காலடியில் கொட்டியுள்ள சந்தர்ப்பத்தை கையாள்வது எப்படி?

வாய்ப்புக்களை எதிர்பார்த்து காய் நகர்த்தும் அரசியலால், நாட்டு நிலைமைகள் நாளாந்தம் விறுவிறுப்பாகி வருகிறது. சரிந்துபோன பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வாய்ப்புத் தருமாறு அரசாங்கம் கோருகிறது. ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி வாக்குரிமைகளுக்கு வாய்ப்பளிக்குமாறு எதிர்க்கட்சிகள் கோருகின்றன. நமது, நாட்டின் இன்றைய கள நிலவரங்களே இவை. இதனால், வாக்குகளா முக்கியம்? அல்லது வயிற்றுப் பசியா பிரதானம்? என்ற கோணங்களிலும், கோலங்களிலும் விமர்சனங்கள் எழுகின்றன. வயிற்றுப் பசிப் பிரச்சினை, தேர்தலில் நல்ல பயன்களைத் தருமென எதிர்க்கட்சிகள் நினைக்கின்றன. அதாவது, இந்தப் பொருளாதாரப் பிரச்சினை தீர்வதற்குள் இவர்களுக்கு தேர்தல் தேவை. அரசாங்கமோ பசியைப் போக்கும் வழிகளைத் தேடியவாறு பலப்படுவதற்கு கால அவகாசத்தை எதிர்பார்க்கிறது. சம பலத்திலும் சம பார்வையிலும் உள்ள இந்தப் பிரச்சினைகளே அரசியல் களத்தை உரசிப்பார்க்கின்றன.

இதன் தாற்பர்யங்களைப் புரிந்துள்ள அரசாங்கம், அவசர அவசரமாக அரசியலமைப்பின் 13ஆவது திருத்தமூடாக அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிக்கிறது. வெளிநாடுகளுக்கு இந்த எதிர்க்கட்சிகள் பூசவுள்ள சாயங்களைத் திசை திருப்ப வேண்டுமானால், நாட்டின் நீண்டகால தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாணவே வேண்டும். உண்மையில் நல்லதொரு சந்தர்ப்பம் இது.

தனக்கு வரப்போகும் ஆபத்திலிருந்து தப்பிக்க ஜனாதிபதியும், அரசாங்கமும் இதைச் செய்தே ஆக வேண்டுமென்ற நிலையிருக்கிறது. இந்நிலையில், பிரதான எதிர்க்கட்சியும் அதன் சகபாடிகளும் அரசாங்கத்தின் நெருக்கடியை பயன்படுத்துவதுதான் அரசியல் தர்மம். தமிழர்களுக்காகவே குரல் கொடுக்கவும் போராடவும் வந்துள்ளதாகக் கூறும் தமிழ் தேசிய தலைமைகளின் காலடியில் கடவுளே கொண்டு வந்து கொட்டியுள்ள சந்தர்ப்பம்தான் இது. அரசாங்கங்களை எதிர்ப்பது என்ற மரபு வழியிலிருந்து மாறி, வரப்போகும் தீர்வுத் திட்டத்துக்கான மூன்றிலிரண்டு பலத்தைப் பெறுவதற்கு தமிழ் தலைமைகள் ஆதரவளித்துப் பார்க்கட்டும். தற்போதைய ஜனாதிபதி, இவரது தயவிலுள்ள அரசாங்கம் என்பவற்றின் கடந்த கால வரலாறுகள்தான், தீர்வுத் திட்டத்தை தட்டில் வைத்து திணிக்கும் சூழ்நிலையை இவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இந்த ஞாபகங்களை வெளிநாடுகளில் நினைவூட்டுவதால் வரப்போவது ஒன்றுமில்லை. எனவே, நமது வயிற்றுப் பசித் தீர்வுகளுக்கான பாதைகளை மூடுவதை விட, வரலாற்றுப் பாதையில் விரவிக் கிடக்கும் வடுக்களைப் போக்க, ஜனாதிபதியின் இந்த முயற்சிகளுக்கு ஒத்துழைத்தே தீரவேண்டும். மட்டுமல்ல, ஐக்கிய மக்கள் சக்தியையும் இதற்காக அழுத்த வேண்டியும் இருக்கிறது.

சகல அரசியல் கட்சிகளும் பேதங்களின்றிப் பயணிப்பதற்கான புதிய சூழலை காலி முகத்திடல் கலவரங்கள் ஏற்படுத்திய பின்னருமா "இது எமது ஆட்சி", "நாங்கள் எதிர்க்கட்சி" என்ற வாதப்பிரதிவாதங்கள். எனவே, மக்கள் ஆணை தேவை, சர்வஜன வாக்கெடுப்புத் தேவையென்கின்ற நிலைமைகள் ஏற்படாமல், சகல பிரதிநிதிகளும் ஒன்றுபட்டு, ஒத்துழைத்து உழைத்தால் நாட்டின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும். இந்தத் தீர்வுகள் வந்தால், சர்வதேசத்துக்கும் நமது நாட்டில் நம்பிக்கை பிறந்துவிடும். இது பிறந்தால், நமது பொருளாதாரப் பிரச்சினைக்கு வழியும் திறந்துவிடும்.

இப்போதுள்ள நமது தலைவர்களில் (சிங்களம், தமிழ், முஸ்லிம்) வாழ்க்கையின் ஓய்வு நிலைக்குச் செல்லும் வயதுக்கு வந்தவர்களே அதிகம். எனவே, இளைய தலைமுறையினருக்கு சிறந்த எதிர்காலத்தை அன்பளித்துச் செல்லும் ஒரு கைங்கர்யத்தைச் செய்வது இவர்களின் கடமையாகியுள்ளது. கட்சி, இனம், மதம் மற்றும் மொழியென்ற பாகுபாடுகளில்லாத சிந்தனைகளுக்குள் நமது செல்வங்களை இழுத்துச் செல்ல இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்துங்கள். இந்தப் பாகுபாடுகளால் மோதி, முரண்பட்டு நாம் அனுபவித்த வேதனைகளையா நாம் வாரிசாக விட்டுச்செல்லப் போகிறோம்?

எனவே, இன்றுள்ள சந்தர்ப்பத்தை இதய சுத்தியாகப் பயன்படுத்த அரசியல் தலைமைகள் முன்வரட்டும். எல்லாத் தரப்பினரையும் விரல்நீட்டி குற்றம் சுமத்த மக்களைத் தயார்படுத்தாதீர்கள். வந்த சந்தர்ப்பத்தை தவறவிட்டோர் யார்? வரும் சந்தர்ப்பத்துக்காக காத்திருப்போர் யார்? எந்தச் சந்தர்ப்பங்களும் வரக்கூடாதென உழைப்பவர்கள் யார்? இவற்றையெல்லாம், கடந்த கால வரலாறுகள் மக்களுக்குப் படிப்பினையூட்டியுள்ளன.

எனவே, பாகுபாடுகள் மற்றும் வேறுபாடுகளால் கோணங்கள், கோலங்களாகச் சிந்தித்து, கோடியின் மூலைக்குள் குந்தியிருக்காதீர்கள். நாட்டுக்குப் பல கோடிகள் வருகின்ற கோணங்களிலும் மற்றும் கோலங்களிலும் சிந்தித்து, பல கோடி ரூபாவை ஈட்டவும் அந்நியச் செலாவணியாக உழைக்கவும் வழிகளை ஏற்படுத்த ஒன்றுபடுங்கள்.

***






# 58 மாணவர்களை சுனாமியில் இழந்த மாளிகைக்காடு அல் - ஹுசைன் வித்தியாலயத்தின் சுனாமி நினைவு தின நிகழ்வும், துஆ பிராத்தனையும்!







சுனாமிப்பேரலையில் 58 மாணவர்களை இழந்த கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு கமு/கமு/ அல்- ஹுசைன் வித்தியாலயத்தின் சுனாமி நினைவு தின நிகழ்வும், துஆ பிராத்தனையும் பாடசலை அதிபர் ஏ.எல்.எம்.ஏ. நழீர் தலைமையில் பாடசலையில் இன்று (26) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா தவிசாளரும், மாளிகைக்காடு அல்- ஹுசைன் வித்தியாலய பழைய மாணவர் சங்க செயலாளருமான யூ.எல்.என். ஹுதா உமர் பிரதம பேச்சாளாராக கலந்துகொண்டு மாளிகைக்காடு அல்- ஹுசைன் வித்தியாலய 58 மாணவர்களின் இழப்பு, சுனாமி இலங்கைக்கு ஏற்படுத்திய வடுக்கள், சுனாமிக்கு பின்னர் அப்பாடசாலையின் மீள் உருவாக்கம், பாடசாலை மாணவர்களின் கல்வி நிலைகள், சமகாலத்தில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய கௌரவங்கள், மாளிகைக்காடு கமுஃ கமுஃ அல்- ஹுசைன் வித்தியாலய உருவாக்கத்தில் பாடுபட்டோர்கள் தொடர்பில் உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பாடசாலை பிரதியதிபர் ஏ.எம். நளீம், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# தூக்கத்தை முழிக்க வைக்கும் ஸ்மார்ட்ஃபோன்கள்



ஸ்மார்ட்ஃபோன்கள் நம் வாழ்க்கையை எளிதாகி, அதிக உற்பத்தித் திறன் கொண்டதாக ஆக்க உதவியாக இருப்பதுடன் எமக்கு இலகுவாக தகவல்களை வழங்கவும் எம்மை ஊக்கமாகவும் மகிழ்ச்சியாகவும் வைக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை இந்த நவீன யுகத்தில் தடுக்க முடியாத ஒரு தேவையாகும் ஆகியிருக்கிறது. நாட் கணக்கில், வாரக் கணக்கில் நீடிக்கும் பல வேலைகளை ஒருசில நிமிடங்களில் செய்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளை இந்த ஸ்மார்ட் போன்கள் மூலம் செய்து கொள்கிறோம்.

ஆனால் இதன் அதீத பாவனை அல்லது அத்துமீறிய பாவனை எமது தூக்கத்திற்கு பல பாதிப்புகளை ஏற்படுத்திவருவது வேதனை தரும் விடயமாக மாறி வருகிறது.

இதன் தாக்கம் இன்றைய காலத்தில் நாம் தூங்கும் போது கூட, உண்மையிலேயே இந்த போன்களை ஒப்க செய்ய முடியாது என உணரும்படி நம்மை கட்டாயப்படுத்தியுள்ளது. இது எங்கள் ஆரோக்கியத்தில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்திவருவதை நாம் உணர்ந்தாலும் அதை ஏற்றுக் கொள்வதில் பாராமுகமாக இருக்கிறோம். அல்லது விதண்டாவாதமாக இருக்கிறோம்.

விளக்குகளை அணைத்துவிட்டு தூங்கச் செல்லும் நேரத்தில், நம் மூளைக்கு பல விதமான தகவல்களை கொடுக்கும் போது மூலை இன்னும் தூண்டுதலடைய வழிகளை நாமே வெட்டிக் கொடுக்கிறோம். அதாவது

எங்கள் ஃபோனை சரிபார்ப்பது அல்லது தொடர்ந்து பாவிப்பது எங்கள் மூளை அதில் வேகமாக செயற்பட தூண்டுதலாக அமைகிறது” என்பதுவே இதன் பொருளாகும். ஃ போன் பாவனை இந்த நேரத்தில் எங்களை மிகவும் சுறுசுறுப்பாகவும் விழிப்புடனும் இருக்க வைத்து விடும். எங்கள் மூளையை அதில் ஆசையுடன் ஈடுபட வைத்து எங்கள் தூக்கத்தை தாமதப்படுத்தச் செய்துவிடும்.

நாங்கள் ஃபோனில் ஏதாவது ஒரு விடயத்தில் ஏதோ முறையில் ஈடுபட ஆரம்பித்த பிறகு எங்கள் மனம் சுறுசுறுப்பாகவும் மிகுந்த ஈடுபாட்டுடனும் செயற்பட ஆரம்பிக்கும்.

உறங்கும் நேரத்திற்கு மிக அருகில் எங்கள் மொபைலை தொடர்ந்து பயன்படுத்தும் பழக்கம் நீடித்தால் அது எங்கள் தூக்கத்தை பல விதங்களில் பாதிக்கச் செய்து விடும்.

இது ஆரம்பத்தில் எங்களுக்கு பாதிப்பில்லாத பழக்கம் போல் தோன்றலாம். ஆனால் இப்படி படுக்கைக்கு சென்று எங்கள் மொபைலைத் திறப்பது காலப்போக்கில் உண்மையாகவே எங்கள் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம். எங்கள் ஃபோனை பார்த்து, நல்லதோ அல்லது எதுவோ செய்திகளைப் படிக்கும் செயல் அல்லது உரையாடும் செயல் எங்கள் கவனத்தைத் திசைதிருப்பிவிடும். படுக்கைக்கு செல்வதன் அவசியத்தை அதன் முறைகளை எல்லாம் மாற்றி ஒழுங்கு அற்றதாக ஆக்கிவிடும். விழித்திருக்க எங்கள் மூளையைத் தூண்டிவிடும். மற்றும் விரைவான கண் அசைவு தூக்கத்தை தாமதப்படுத்தி விடும். உண்மையில் எங்கள் மூளை புத்துணர்ச் சியடையும் போது அது எங்களின் சாதாரண உறக்க நேரத்தைத் தாண்டி பல மணிநேரம் எங்களை விழித்திருக்க செய்துவிடும்.

ஸ்மார்ட் போன் தொழில்நுட்பம் எமக்கு இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாத ஒன்றாக இருந்ததாலும் அது எங்கள் தூ க்கத்தை சீர்குலைக்கும் வகையில் நாம் பயன்படுத்தவதென்றால் அது தொழில்நுட்பத்தின் பிழை அல்ல. அதை பயன்படுத்தும் முறையில் நாங்கள் விடும் பிழை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

(இதனுடன் தொடர்புடைய திரை நேரம் பற்றிய தகவல்களை அடுத்த வாரம் நோக்குவோம்)

# நுவரெலியா கல்வி வலயத்தில் ஓய்வு பெறும் 8 அதிபர்கள்






(பி.கேதீஸ் – தலவாக்கலை)

நுவரெலியா கல்வி வலயத்தில் சேவையாற்றி வரும் 8 அதிபர்கள் இம்மாத இறுதியில் ஓய்வு பெறுகின்றனர். நுவரெலியா கல்வி வலயத்தின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய இவர்களின் சேவை நலன் பாராட்டு விழா நுவரெலியா கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தி உதவி கல்விப் பணிப்பாளர், மூன்று கோட்டத்தையும் சேர்ந்த கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் அவரவர் சேவையாற்றி வரும் பாடசாலைகளுக்கு நேரடியாக சென்று பாடசாலை சமூகத்துடன் இணைந்து இந்த அதிபர்களை பாராட்டி கௌரவித்தனர்.

அந்தவகையில் 35 வருட அரச சேவையிலிருந்து அக்கரப்பத்தனை தமிழ் வித்தியாலய அதிபர் ஆறுமுகம் மாரிமுத்து, 33 வருட அரச சேவையிலிருந்து அக்கரப்பத்தனை போட்மோர் தமிழ் வித்தியாலய அதிபர் கிருஸ்டோபர் சாள்ஸ், 34 வருட அரச சேவையிலிருந்து ஹோல்புறூக் ஆரம்ப பாடசாலை அதிபர் சுப்ரமணியம் புஸ்பனீனா, 35 வருட அரச சேவையிலிருந்து நானுஓயா கார்லிபேக் தமிழ் வித்தியாலய அதிபர் அந்தோனிமுத்து சவரிமுத்து, 31 வருட அரச சேவையிலிருந்து நானுஓயா கிளாஸ்கோ தமிழ் வித்தியாலய அதிபர் சுப்பையாபிள்ளை கோகிலவாணி,35 வருட அரச சேவையிலிருந்து சென்கிளையார் தமிழ் மகா வித்தியால அதிபர் ஆறுமுகம் சத்தியமூர்த்தி, 40 வருட அரச சேவையிலிருந்து பத்தனை தமிழ் மகா வித்தியால அதிபர் சுப்பையா செல்வம் ஆகியோர் ஓய்வு பெறுகின்றனர்.

## மல்வான அல்-முபாரகில் 30ம் வருட ஒன்றுகூடல்





(பூகொட இர்பான் ஹனீபா)

மல்வான அல்-முபாரக் தேசிய பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1992 சாதாரண தர மாணவர்களின் 30ம் வருட ஒன்றுகூடல் அண்மையில் (18) தொம்பே ஜன்ரோ வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது. காலை 8 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட குடும்ப ஒன்றுகூடல் நிகழ்வில் மல்வான அல்-முபாரக் தேசிய பாடசாலையில் கல்வி கற்ற 1992 சாதாரண தர, 1995 உயர்தர மாணவ, மாணவிகள் குடும்பத்துடன் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலையின் பழைய நினைவுகளை மீட்டிப்பார்த்ததோடு சுவாரஸ்யமான போட்டிகளும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. 92ஃ95 இயக்க தலைவர் இம்தியாஸ் அப்துல்லாஹ் தலைமையில் இடம்பெற்றது.




சுவிட்சர்லாந்தை சேர்ந்த மதிவதனி எழுதிய காட்சிப்பிழைகள் (கவிதை தொகுப்பு) ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு தீர்வு (குழந்தை உளவியல் கட்டுரைகள்) நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் ( 25) ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற போது நூலின் இரண்டு முதல் பிரதிகளையும்

புரவலர் ஹாசீம் உமருக்கு விழாவுக்கு தலைமை வகித்த ஞானம் ஆசிரியர் டாக்டர் ஞானசேகரன் வழங்கி வைப்பதையும் அருகில் கவிஞர் மேமன் கவி, மற்றும் நூலாசிரியை மதிவதனியும் உடன் காணப்படுகின்றனர்.

## கிழக்கு மாகாண கராத்தே வர்ண விருது வழங்கும் விழா!





(எஸ்.அஷ்ரப்கான், எம்.என்.எம்.அப்ராஸ்)

அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச கராத்தே போட்டிகளில் 2015 தொடக்கம் 2021 வரைக்குமான காலப்பகுதியில் பதக்கங்களைப் பெற்றவர்களுக்கு வர்ண விருது வழங்கும் விழா கிழக்கு மாகாண கராத்தே சம்மேளன தலைவர் முகம்மது இக்பால் தலைமையில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய மண்டபத்தில் நேற்று (24) நடைபெற்றது.

இவ் விழாவுக்கு பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் கலந்துகொண்டதுடன், சிறப்பு அதிதிகளாக கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம். மாஹிர்,தென்கிழக்கு பல்கலைக்கழக உடற்கல்வி பொறுப்பாளர் தாஹிர் உட்பட மேலும் பலர் கலந்து கொண்டனர்.

இதில் கிழக்கு மாகாணம் சார்பாக வெற்றிபெற்ற 82 வீரர்களுக்கு வர்ண விருது வழங்கப்பட்டது.





வரலாற்றுப் புகழ்மிகு பேருவளை கெச்சிமலை தர்காவில் வருடாந்த புனித ஸஹீஹுல் புஹாரி முஸ்லிம் ஹதீஸ் பராயண தமாம் பெரிய கந்தூரி மஜ்லிஸ் ஞாயிறன்று (25) சங்கைக்குரிய மௌலவி ஸக்கி அஹம்மத் (அல்-அஷ்ரபி) பின் அஷ்செயஹ் காலிப் அலவி ஹாஜியார் அலவியதுல் காதிரி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. வெளிநாட்டு,உல்நாட்டு இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள், புத்திஜீவிகள்,அரசியல்வாதிகள் பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்கள் இதில் பங்குபற்றினர்.

(படங்கள்– பேருவளை பீ.எம்.முக்தார்)

# அக்குறணை வெள்ள அனரத்தம்: 300 கோடிக்கு மேல் சேதம்?

(ராபி சிஹாப் தீன்)

அக்குறணை நகரம் மற்றும் அதனை அண்டிய பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக அக்குறணை நகரை அண்மித்து ஓடும் பிங்கா ஓயா நேற்று (25) பெருக்கெடுத்ததில் அக்குறணை நகர பிரதேசம் பாரியளவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நீரில் மூழ்கியது

அக்குறணை நகரின் சியா வைத்தியசாலை சந்தியில் சுமார் ஏழு அடி வரையும் நகரின் ஏனைய பகுதிகளில் சுமார் ஐந்து அடி வரையும் வெள்ளநீர் மட்டம் உயர்ந்து காணப்பட்டதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்

நகரில் காணப்பட்ட வியாபார நிலையங்களுக்குள் வெள்ளம் புகுந்ததில் பெருமளவு பொருள் சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் இச்செய்தி எழுதப்படும் வரை ஏற்பட்ட சேதங்கள் குறித்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை எனினும் 300 கோடி மேற்பட்ட சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன

அக்குறணை நகர வர்த்தகர்கள் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் பல நூறு கோடி ரூபாவிற்கு மேற்பட்ட பொருற்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வாறு வருடா வருடம் ஏற்படும் வெள்ளப்பெருக்கு காரணமாக தொடர்ச்சியாக பொருளாதார இழப்புக்களை சந்திந்து வருவதாகவும் குறிப்பிட்டார்கள்

பிங்கா ஓயாவின் நீர்மட்டம் குறைந்துவருவதுடன் வெள்ளத்தில் மூழ்கிய அக்குறணை நகர பகுதியில் சுத்திகரிப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.














# சாதனைகளுடன் நிறைவுற்ற உலகக்கிண்ண கால்பந்தாட்டம்!



அப்ரித் வஸீர்

இம்முறை 2022 கட்டரில் நடைபெற்ற உலகக்கிண்ண போட்டிகள் வரலாற்றில் பல தடயங்களையும் சாதனைகளையும் பதித்திருக்கிறது என்பதில் யாருக்கும் எந்த சந்தேகமுமில்லை. இம்முறை நடைபெற்ற ஒவ்வொரு போட்டியும் தனித்தனி கட்டுரைகளாக விவரிக்கும் அளவுக்கு வெகு விமர்சையாக நடைபெற்றன.

இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை அர்ஜென்டீன மற்றும் பிரான்ஸ் அணிகளுக்கிடையில் விறுவிறுப்பாக நடைபெற்றது. பெனல்டி முறையில் வெற்றியடைந்து அர்ஜென்டீன அணி கிண்ணத்தை தமதாக்கிக்கொண்டது. இறுதிப்போட்டியில் குறிப்பாகப் பல சுவாரசிய நிகழ்வுகளும் மறக்க முடியா சம்பவங்களும் நிகழ்ந்தன. குறிப்பாக 79 ஆவது நிமிடம் வரை வெற்றி அர்ஜென்டீன இலகுவாக அடைந்தது இன்னும் சொற்ப வேலையில் கிண்ணத்தை அர்ஜென்டீன பெறவிருக்கிறது என அர்ஜென்டீன ரசிகர்கள் சந்தோசத்தில் ஆவலாக இருக்கும் அந்த நொடியில் பிரான்ஸ் அணியின் இளம் வீரர் கிளியன் எம்பாபே ஒரு தனி வீரராக பிரான்ஸ் அணியின் முதலாவது கோலை பதிவு செய்தார். ஆட்டம் சூடு பிடிக்க ஆரம்பித்தது. அந்த கோல் அடித்து வெறுமனே 97 வினாடியில் அடுத்த கோலையும் பதிவு செய்தார் அந்த இளம் வீரம் எம்பாபே.

ஆடிப்போனது முழு அரங்கும். 2:2 எனும் சம நிலையில் இரு அணிகளும், மேலதிக நேரமும் வழங்கப்பட்டன. இரு அணிகளும் விறுவிறுப்பாக போட்டியை விளையாடிக்கொண்டிருந்தது. 108வது நிமிடத்தில் பிரபல கால்பந்தாட்ட வீரர் மெசியினால் அர்ஜென்டீன அணிக்கான மூன்றவது கோல் அடிக்கப்பட்டது. போட்டி 3:2 எனும் வித்தியாசத்தில் சூடு பிடித்து ஆட்டம் கொண்டது. வெறும் பத்தே நிமிடத்தில் மீண்டும் பிரான்ஸ் அணியின் அந்த இளம் வீரன் எம்பாம்பே தனது மூன்றாவது கோலை 118வது நிமிடத்தில் பதிவு செய்தார். அர்ஜென்டீன அணியின் வீரர் மெசியினால் 2 கோல்களும் மேரியோவினால் ஒரு கோலும் பதிவு செய்யப்பட்டது. பிரான்ஸ் அணியின் மூன்று கோல்களையும் தனி ஒரு வீரனகாக கில்லியன் எம்பபே பதிவு செய்து உண்மையானதோர் இறுதிப்போட்டிக்கான அர்த்தத்தை நிருபித்தார். இதைத் தொடர்ந்து பெனால்டி வழங்கப்பட்டு 4:2 எனும் நிலையில் அர்ஜென்டீன அணி உலகக்கோப்பையை தமதாக்கிக் கொண்டதது.

2022 கால்பந்தாட்ட உலகக்கோப்பையின் ஓர் கண்ணோட்டம்.

கத்தார் நாட்டில் கடந்த 20ம் திகதி நவம்பர் முதல் 8ம் திகதி டிசெம்பர் வரை போட்டிகள் நடைபெற்றன. மொத்தம் 32நாடுகள் இப்போட்டிகளில் பங்குபற்றின. 5 நகரங்களில் உள்ள 8 அரங்குகளில் இப்போட்டிகள் நடைபெற்றன. மொத்தமாக 64 போட்டிகள் நடைபெற்றதோடு மொத்தமாக முழுப் போட்டியும் 172 கோல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 3,404,252 பார்வையாளர்கள் கத்தார் தேசத்தில் நடைபெற்ற போட்டிகளைக் கண்டு கழித்துள்ளனர். 2022க்கான கால்பந்து உலக்கக் கோப்பை சேம்பியனாக அர்ஜென்டீன அணியும் இரண்டாம் இடத்தை பிரான்ஸ் அணியும் மூன்றாம் இடத்தை கோர்சியா அணியும் நான்காம் இடத்தை மொரோக்கோ அணியையும் பதிவு செய்துள்ளது.

போட்டியின் பரிசில்கல்காக, முதலாவது இடத்தை பெற்றுக்கொண்ட அணிக்கு 42 மில்லியன் அமேரிக்க டொலர்களும், இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்ட அணிக்கு 30 மில்லியன் அமேரிக்க டொலர்களும், மூன்றவது இடத்தை பெற்ற அணிக்கு 27 மில்லியன் அமேரிக்க டொலர்களும், நான்காவது இடத்தை பெற்ற அணிக்கு 25 மில்லியன் அமேரிக்க டொலர்களும், 5 தொடக்கம் 8ம் இடம் வரை பெற்ற அணிகளுக்கு ஒரு அணிக்கு தலா 17 மில்லியன் அமேரிக்க டொலர்கள் என்ற அடிப்படையில் மொத்தமாக 68 மில்லியன் அமேரிக்க டொலர்களும், 9 தொடக்கம் 16 வரை இடங்களை பெற்றுக்கொண்ட அணிகளுக்கு 13 மில்லியன் அமேரிக்க டொலர்கள் வீதம் மொத்தமாக 104 மில்லியன் அமேரிக்க டொலர்களும், 17 தொடக்கம் 32 வது அதாவது இறுதி இடம் வரை பெற்ற அணிகளுக்கு 9 மில்லியன் அமேரிக்க டொலர்கள் வீதம் மொத்தமாக 144 மில்லியன் அமேரிக்க டொலர்கள் பரிசாக வழங்கப்பட்டது. அந்த வகையில் 2022ம் ஆண்டுக்கான உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டிக்கான மொத்த பரிசுத்தொகையாக 440 மில்லியண் அமேரிக்க டொலர்கள் வழங்கப்பட்டது.

உலகக்கிண்ண போட்டிகளில் அதிகூடிய கோல்களை அடித்து (8 கோல்) கில்லியன் எம்பப்பே தங்கப்பாதனியையும், அற்ஜெண்டீன அணியின் மெசி தங்கப்பந்தினையும், அர்கேண்டீன அணியின் கோல் கீப்பர் எமி மார்டினஸ் தங்க கையுறை எனும் பிரபல பதக்கங்களையும் தமதாக்கிக்கொண்டனர்.

அடுத்த பிபா உலகக்கிண்ண போட்டிகள் நான்கு வருடங்களின் பின் அதாவது 2026ம் ஆண்டு அமேரிக்க, கனடா மற்றும் மெச்சிக்கோ ஆகிய நாடுகளில் நடைபெறவிருக்கிறது. இப்போட்டிகளில் மொத்தமாக 48 நாடுகள் பங்கு பற்ற இருப்பதும் மொத்தமாக 16 நகரங்களிலும் இப்போட்டிகள் நடைபெரவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.





யாவருக்கும் வீடு எனும் தொனிப்பொருளில் OCD அமைப்பின் ஏற்பாட்டில் சம்மாந்துறையில் கட்டப்பட்ட 8ஆவது வீடு அமைப்பின் தலைவர் அஸ்மி யாசினினால் திறந்து வைக்கப்பட்டது.

# ஆயுள்வேத பரம்பரை வைத்தியர்களுக்கான ஒருநாள் செயலமர்வு!



(அலா சியாக்)

திருகோணமலை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத ஆயுள்வேத பரம்பரை வைத்தியர்களுக்கான ஒருநாள் செயலமர்வு (22) திருகோணமலை முதலமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வுக்கு சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் பி.தயானந்தன் அவர்களும், கொழும்பு ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்தியர்களான ரீ.சிவகுமார், லலித் அலவத்கொட அவர்களும், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவின் வைத்தியர்களான எஸ்.சிவச்செல்வன், எஸ்.சதீஸ் உள்ளிட்ட வைத்தியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இச்செலமர்வில் பரம்பரை வைத்தியர்கள் தொடர்பான சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுக்க நெறிமுறைகள் பற்றி இடம்பெற்றது. குறிப்பாக, நோயாளர்கள் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள், தொழில் தொடர்பாகவும் அதே தொழிலில் ஈடுபட்டுள்ள சக வைத்தியர்கள் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள், சமூகம் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள், சட்டம் மற்றும் நீதி தொடர்பான நெறிமுறைகள் பற்றியே இச்செலமர்வு இடம்பெற்றது.






கம்பஹா, உடுகொட அல்-அஸ்தர் பாலர் பாடசாலையின் கலைவிழா கடந்த 25ஆம் திகதி அறபா முஸ்லிம் மகாவித்தியாலய விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இக்கலைவிழாவில் மாணவி ஸிக்ரா ஸமீர் இஸ்லாமிய கீதம் இசைப்பதையும், மாணவிகள் ஒருசிலரின் குழு நடனத்தையும், இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கம்பஹா கல்வி வலய முன்னாள் ஆரம்பப் பிரிவு ஆலோசகரும், கஹட்டோவிட முஸ்லிம் பாலிகா மகாவித்தியாலய ஆரம்பப் பிரிவு பொறுப்பாசிரியையுமான எம்.எம். கே.மெபியா மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# சிலாவத்துறை பாடசாலை வரலாறு நூல் வெளியீடு




சிலாவத்துறை பாடசாலை வரலாறு நூல் வெளியீடானது அண்மையில் சிலாவத்துறை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நூலின் முதல் பிரதியை கலைத்தென்றல் கவிஞர் ஹாமித் எம். சுஹைப் அவர்கள், நூலாசிரியரும் ஆய்வாளருமான எஸ்.எம். அன்ஸார் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதையும், இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்களையும் படங்களில் காணலாம்.




ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவின் உன்னத எண்ணக்கருவுக்கு அமைவாக "ஐக்கிய மக்கள் சக்தி மூச்சு" எனும் வைத்தியசாலைகளுக்கான உபகரணங்கள் வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் அத்திட்டத்தின் கீழ், 56 ஆவது நிகழ்வாக, சஜித் பிரேமதாஸவினால் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்றை வழங்கி வைக்கும் நிகழ்வு வைத்தியசாலை குழுத் தலைவர் டாக்டர். எம்.ஏ.றக்கீஸ்து தலைமையில் நேற்று (24) வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இதன் போது வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ஜி. ரொஷான் போலிடம் கையளிக்கப்பட்டது.

(சியாத் .எம்.இஸ்மாயில்)






அரநாயக்க திப்பிட்டியில் இயங்கி வரும் "The Bridge" கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு நினைவு சின்னம் வழங்கி கௌரவ படுத்தும் நிகழ்வொன்று வில்பொல அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் சுமார் நாற்பத்து மூன்று ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டதோடு எம்.ஏ. ஹூஸ்னி முபாரக் ஆசிரியர் சிறப்புரை ஆற்றினார்கள். இதில் அதிபர்களும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்ததை இங்கு காணலாம்.

# நீதிக்கான குரல் சட்டத்தரணி கௌரி தவராசா



**அப்ரா அன்சார்**





சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி ஷங்கரி தவராசா கடந்த வருடம் ஆகஸ்ட் மூன்றாம் திகதி திடீர் சுகயீனம் காரணமாக காலமானார். தமிழரசியல் கைதிகளின் வழக்குகள் உள்ளிட்ட இலங்கையில் பிரபல்யமாக இருந்த பல வழக்குகளில் ஆஜராகி தனது வாதத் திறமையால் நியாயத்தைப் பெற்றுக் கொடுத்தவர்.

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டம் போன்றவற்றின் கீழ் கடந்த காலங்களில் வகை வகையாக கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைத்து வைக்கப்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகளின் விடுதலைக்காக மிக நீண்ட காலமாக செயல்பட்டு வந்திருந்தார். இவரின் இழப்பு அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நம்பி இருந்தவர்களுக்கு பாரிய இழப்பாகவே அமைந்துள்ளது.

இவர் ஆரம்ப காலங்களில் தமிழரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கத்துரை போன்ற முக்கியமானவர்களின் வழக்கு விவகாரங்களில் ஆட்சியாளர்களினால் எடுக்கப்பட்ட உயர் அச்சுறுத்தல்களையும் மீறி துணிவோடு நீதிமன்றப்படி ஏறி வழக்காடிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.ரி தவராசாவுக்கு என்றேனும் மிக்க பலன் ஆக நின்று சட்ட ஆலோசனைகள் உட்பட பல்வேறு வழிவகையிலும் உதவி வந்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தில் அரசமைப்பு தொடர்பான மிக முக்கிய வழக்குகளை முன்னின்று நெறிப்படுத்துவதினூடாக தனது சட்டப்புலமையும், வாதத்திறமையும் இவர் பறைசாற்றி வந்தார்.

பிரதானமாக குடிமக்களின் அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கு விடயங்களில் மிகுந்த கரிசனை கொண்டிருந்தார் . மனித கடத்தல்கள், திட்டமிடப்பட்ட அரசியல் படுகொலைகள் போன்ற வழக்குகளுக்காக உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் குழுவோடு நின்று அவற்றை நெருப்பெடுத்தியதன் மூலம் உள்நாட்டில் மாத்திரமன்றி, சர்வதேசரீதியில் பேசப்பட்ட பிரபல சட்டத்தரணி ஆவார்.

இவர் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சட்ட ஆலோசகராக பல பணிகளை ஆற்றியுள்ளதுடன், நாட்டில் சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகத்தின் உயிர்ப்பையும் தக்க வைப்பதில் தனது சட்டத்துறை மூலம் முக்கிய வகிபாகத்தை செய்துள்ளார். குடியியல் வழக்குகள், பெண்களுக்கு எதிரான அத்திமீறல் செயல்பாடுகள் தொடர்பான வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகி நியாயத்தை பெற்றுக் கொடுப்பதற்கு ஒரு போதும் பின் நின்றதேயில்லை.ஆயிரத்துக்கும் மேற்பட்ட அடிப்படை மனித உரிமை மனுக்களையும் ஆட்கொணர்வு மனுக்களையும் தாக்கல் செய்த கௌரி சங்கரி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை எதிர்கொள்வதில் அதி உச்ச ஆளுமையாகவும் , அனுபவஸ்தராகவும் இருக்கின்ற ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக இருந்தே வழக்குகளை எதிர்கொண்டனர்.

சட்டத்துறையில் இந்தளவு இணக்கமாக இணைந்து பயணித்த ஒத்துழைப்பு மிக்க தம்பதியினரைக் காண்பது அரிது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ற கோஷம் நம் நாட்டில் இன்னும் முழங்கிக் கொண்டிருக்கின்றது.

எல்லார் பார்வைக்கும் புரிதலுக்கும் அப்பால் முகாமுக்குள் அடைக்கலத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்தவர்களின் தகவல்கள் உத்தியோபூர்வமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும் என்பதற்காகவே அவர் கையாண்ட யுக்திகள் வினோதமானவை. இதில் பலர் பாதுகாக்கப்பட்டதில் கௌரியின் பங்கு காத்திரமானது. உண்மையான தொழில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களிடம் மாத்திரமே இவ்வாறான ஆற்றல் வழியாக எத்தகைய இக்கட்டான நிலைமைகளையும் விசேடமாகக் கையாளும் திறன் கொண்டமைய முடிகின்றது. மற்றவருக்கு உதவுவதில் மாத்திரமே குறிக்கோளாக இருந்தவர்.

அது மாத்திரமின்றி சட்டத்திறனின் கௌரி அவருடைய, கணவர் சட்டத்தரணி தவராசாவின் மாபெரும் பலமாகவும் இருந்தார். மனித உரிமை வழக்குகள் என்றால் நிச்சயம் அங்கு சட்டத்தரணி கௌரி சங்கரி பிரசன்னமாகி இருப்பார். பல ஆயிரக்கணக்கான மனித உரிமை வழக்குகளை இவர் தாக்கல் செய்திருக்கின்றார். பல சட்டத்தரணிகள் மேற்கொள்ளும் கண்கட்டு வித்தைகளுக்கு அப்பால் இவர்கள் இருவரும் விதைத்திருக்கும் நேர்மை என்றும் சாய்க்க முடியாதது.

மக்களின் போராட்டங்களை நசுக்க உலகில் எந்த ஒரு அரசும் எப்போதும் வைத்திருக்கும் ஒரே ஒரு ஆயுதம் அவசரகால சட்டத்துடன் கூடிய பயங்கரவாத தடைச் சட்டம் ஆகும். நம் நாட்டில் 1979 ஆம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் பல்வேறு அப்பாவிகளின் வாழ்க்கையை காவு கொண்டு அவர்களை இருள் சூழ்ந்த உலகினில் தூக்கி வீசிவிட்டு அமைதியாகத்தான் இருந்தது.ஆனால் இனப்பற்றும் மனிதமும் கொண்ட குறிப்பிட்ட சில சட்டத்தரணிகள் தான் இந்த அநீதிக்கு எதிராகச் சற்றுப் பயப்படாமல், குரல் கொடுத்தவர்கள் ஜனாதிபதி சட்டத்தரணி சட்டத்தரணி கே.வி தவராசா ஆவார்.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இன விடுதலைக்காகப் போராடி இந்தச் சட்டத்தின் கீழும் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழும் கைது செய்து வைக்கப்பட்டவர்களின் ஆயிரக்கணக்கான வழக்குகளுக்கு ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா ஆஜராகியிருந்தார்.2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிந்த பின்னரும் கூட மேல் நீதிமன்றங்களில் பல நூறு குற்றப்பத்திரங்களை சட்டமா அதிபர் திணைக்கத்தில் தாக்கல் செய்தது. ஆயினும் தவராசா சளைக்காமல் , எந்தவிதமான விளம்பரங்களுமின்றி வழக்காடி நீதியைப் பெற்றுக்கொடுக்க போராடினார்.

யுத்த காலத்தில் இலங்கையில் அனைத்து ஊடகங்களிலும் தலைப்புச் செய்தியாகவும் , விசேட செய்தியாகவும் அதிகமாக பரபரப்பாக பேசப்பட்ட சம்பவங்களினை அடிப்படையாகக் கொண்டு தொடுக்கப்பட்ட வழக்குகள் பெரும்பாலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தான் போடப்பட்டது. அவற்றில் அதிகமான வழக்குகளில் ஜனாதிபதி சட்டத்தரணி தவறாகவே குற்றச்சாட்டப்பட்டவர்களுக்காக சட்டத்தரணியாக ஆஜராகினார். சிங்கள மக்களுக்கு மத்தியிலும் பாதுகாப்பு தரப்பினருக்கு மத்தியிலும் அதிக கோபத்தையும் ஆத்திரத்தையும் வெறுப்பையும் விதைத்த பல்வேறு வழக்குகளில் பயங்கரவாதியாக குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக ஆஜராவதற்கே அதிக தைரியம் தேவைப்பட்ட போது பல சட்ட்தரணிகள் நமக்கு ஏன் அதிகாரத்துடன் வம்பு என்று ஒதுங்கிக் கொள்ளும் போது குற்றச்சாட்டப்பட்டவர்கள் நிரபராதிகள் என்று ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாக வாதாடினார். பாரதூரமாக சில வழக்குகள், உயிர்அச்சுறுத்தல் மிகுந்த சூழ்நிலைகளை தோற்றுவித்தன அப்போதும் கூட அவர் கொஞ்சமும் அசராமல் அச்சுறுத்தல்கள் பற்றி சற்று பொருட்படுத்தாமல் அது குறித்து புலம்பிக் கொள்ளாது தன் கடமையில் மாத்திரம் கவனம் செலுத்தினார்.

பயங்கரவாத தடைச் சட்டம் ஒருவர் மீது பாய்ந்தால் அவரைக் காப்பாற்ற கௌரி சங்கரியும், தவராசாவும் தான் பொருத்தமானவர்கள் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் பதியும் அளவுக்கு அவர்கள் இருவரினதும் செயற்பாடுகள் சமூகத்தில் அடையாளமாக இருந்தன.

பயங்கரவாத தடைச் சட்ட வழக்கில் தவராசா ஆஜராகின்றார் என்றால் வழக்கு தொடுத்த தரப்பு நம்பிக்கை இழந்துவிடும், அடிப்படை மனித உரிமைகள் சார்ந்து வழக்கு தாக்கல் செய்ய கௌரிசங்கரி பைல் தயார் செய்கின்றார் என்றால் அல்லது ஆட்கொணர்வு மனுவொன்றை சமர்ப்பிக்க போகின்றார் என்றால் அதிகார தரப்பு அச்சம் கொண்டு தடுமாறும் அளவிற்கு நிலைமையில் மாற்றம் ஏற்பட்டன.

எந்தவித சட்டவிரோத துப்பாக்கிகளும் அவர்களை குறிவைக்க பயப்பட்டன. உறுதியான நிலைப்பாடுகள் அனைத்து விதமான அசாதாரணங்களையும், சாதாரணமாக்கிவிடும் திறமை அவர்களிடம் இருந்தது. இவர்கள் இருவரினதும் மன உறுதிக்கு முன்னால் அத்தகைய சதித்திட்டங்களால் ஈடுகொண்டு நிற்க முடியவில்லை. அதற்காக அவர்கள் ஒருபோதும் கவச வாகனங்களைக் கொண்டு தமக்கான பாதுகாப்பை அமைக்கவில்லை. மிகச் சாதாரணமாக, எல்லோரும் அணுகும் விதமாகவே இருந்தார்கள். அத்தோடு அவர்களை சந்திப்பதும் அவ்வளவு சிரமமான காரியமாக இருக்கவில்லை. எல்லா தரப்பினரும் இலகுவாக அணுகும் வகையில் இருவரினதும் வாயில் திறந்து இருந்தது. அவர்களுடைய வாழ்வு மிக எளிமையானதாகவே இருந்தது.

மனிதாபிமானம் மிக ஆழமாகவும், இறுக்கமாகவும் இணைந்திருந்தது. வழக்குகளுக்காக வந்தவர்கள் நிர்கதியான நிலையை உணர்கின்ற போதும், பாதுகாப்பின்மையை உணர்கின்ற போதும் அவர்களை தமது வீட்டில் வைத்து அரவணைக்கும் அளவுக்கு நெகிழ்ச்சியான உள்ளம் கொண்டவர்களாக இருந்தனர்.உன் வாழ்க்கை முடிந்துவிட்டது“ என சி.ஐ.டி.யினர் என்னை பயமுறுத்தினர் அவ்வாறான சூழலில் எனக்கு நம்பிக்கை அளித்தவர் சட்டத்தரணி கௌரி தான் என ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் வழக்காடுவதைக் காட்டிலும் பெரும்பான்மை மக்கள் அதிக அளவில் புலங்குகின்ற தலைநகரில் வழக்காடுதல், அதுவும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலி சந்தேக நபர்களைச் சித்தரிக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது அவர்கள் குற்றமற்ற நிரபராதிகள் என்று வாதாடுவது எத்தனை சவாலானது என்பது அனைவரும் அறிந்த விடயம். 2008 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் கௌரி சங்கரி தவராசா, ஜனாதிபதி சட்டத்தரணி வெலியமுன, ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா ஆகியோர்களின் பெயர்கள் விடுதலைப்புலிகளின் சட்டத்தரணிகளாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த வர்த்தமானி ஹல்ஸ்டொப் நீதிமன்ற வளாகத்தில் பலத்த அதிர்வினை உண்டு பண்ணியிருந்தது.

இது குறித்து கௌரியிடம் பிரஸ்தாபித்த ஒருவர் உங்கள் எதிர்காலச் சட்டத்துறைச் செயற்பாடுகளுக்கு இத்தகைய வர்த்தமாணி அறிவித்தல் தடையாக இருக்கும் அத்துடன் உங்கள் பெயருக்கும் அது சிறந்ததல்ல என்று கூற அதற்கு கௌரியின் பதில் எவ்வாறு அமைந்தது, ”இதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு இந்த விமர்சனங்களுக்கு எல்லாம் பதில் அளித்துக் கொண்டிருப்பதை விட கடந்து செல்வது மட்டுமே சரியானது. எந்தப் பழுதுமில்லாமல் சாகும்வரைச் சட்ட த்தரணியாக இருந்து எனது பணிகளை சிறப்பாக செய்வேன். அதை இத்தகைய விமர்சனங்கள் ஒருபோதும் தகர்க்க முடியாது,

இத்தகைய விமர்சனங்கள் இயலாமையின் வெளிப்பாடு ஆகவே இதில் நமக்கு இந்த பயனும் இல்லை என்று சொல்லி இவ்வாறு கடைசி வரையும் அவர் சட்டத்தரணியாக சிறப்புற பணியாற்றினார். அவரது செயற்களத்தை யாராலும் அசைக்க முடியாது இவர்கள் இருவரும் மனிதம் கொண்ட பேரூற்றாகவும் , நீதி புதைக்கப்பட்ட இந்த மண்ணில் அதனை தோண்டி எடுத்து பாரிய போராட்டப் பாதையில் பயணித்த சட்டப்போராளிகள் ஆகும் என்று கூறுவதில் ஐயமில்லை. இவர்கள் என்றும் வரலாற்றில் நிலைத்திருக்கும்.